மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.99/2021</u>

2025ம் ஆண்டு ஜுன் மாதம் 09ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தராஜ் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>09.06.2025 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் இந்த வழக்கில் 12வது வாதி என்றால் சரிதான். மொத்தம் 19 நபர்கள் வாதிகளாக இருந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரிதான். வாதிகள் அனைவரின் குடும்ப வம்சாவழியை காட்டும் வகையில் வம்சாவழி வரைபடம் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சேமலை போயன் தாவா சொத்துக்களை யாரிடம் இருந்து கிரயம் பெற்றார் என்றால் அது எனக்கு தெரியாது.

2. சேமலை என்ன காலை எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் உள்ள நிலத்தை கிரயம் பெற்றார் என்று எனக்கு தெரியாது என்றால் தெரியும். காலை எண் 908/2ஏ 2பி யில் சுமார் 10 ஏக்கர் 45 சென்ட் நிலத்தை கிரயம் பெற்றார் அதன் ரீ சர்வே எண் 878. 1958 கிரைய ஆவணத்தில் எந்த சர்வே எண்ணை கண்டு கிரயம் பெறப்பட்டுள்ளது என்றால் சர்வே எண் 878 கண்டு கிரயம் பெறப்பட்டுள்ளது. 1958 ஆம் ஆண்டு கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சென்று நிலத்தின் 10 ஏக்கர் 45 சென்ட் நிலத்தின் செக்குபந்தி

தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை புல எண்.878 இன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 10 ஏக்கர் 45 சென்ட் அதற்கு மேல் அதில் பூமிகள் எதுவும் கிடையாதா என்றால் ஆமாம்.

(ஆவணங்களை பார்வையிட வேண்டுமென்ற பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.06.09 18:37:52 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்